### தி.மு.க. ஆட்சியின் திட்டங்களின் பெயர்களை மாற்றலாம்; ஆனால்

# மக்கள் அடைந்த பலன்களை மறைக்க முடியாது!

## தூத்துக்குடி தெற்கு மாவட்டச் செயலாளர் – முன்னாள் அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் எம்.எல்.ஏ. அறிக்கை!

*தூத்துக்குடி, ஜூலை 27-*

தூத்துக்குடி தெற்கு மாவட்டச் செயலாளர் - முன்னாள் அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டின் முதலமைச்சர் பொறுப்பு வகித்த 2021-2026ஆம் ஆண்டு வரையான ஆட்சிக் காலத்தில் நிறைவேற்றி செயல்படுத்திய எண்ணற்ற மக்கள் நலத் திட்டங்களின் பெயர்களை மாற்றி ஆனந்தம் அடைகிறது த.வெ.க. அரசு.

மகளிர் வாழ்வில் பெரும் வளர்ச்சியை ஏற்படுத்திய மகளிர் விடியல் பயணம், இளைஞர்கள், இளம்பெண்கள், மாணவர்கள் தங்களது திறனை வளர்த்து உயர் பொறுப்புகளுக்கு வருவதற்கு வாய்ப்பு வழங்கிய நான் முதல்வன் திட்டம், ஆரம்பக்கல்வி மாணவர்களுக்கு வரப்பிரசாதமாக அமைந்த முதலமைச்சர் காலை உணவு திட்டம் ஆகிய திட்டங்களின் பெயர்களை மாற்றியுள்ளது த.வெ.க.அரசு. ஆனால் இந்த திட்டங்களால் பெற்ற நலன்களையும் வழங்கிய திராவிட மாடல் அரசையும் எக்காலத்திலும் மறைக்க முடியாது.

தனது தேர்தல் வாக்குறுதிகளான வருடத்திற்கு 6 சிலிண்டர் இலவசம், மகளிருக்கு மாதம் ரூ.2500, திருமணத்தின் போது 8 கிராம் தங்கம் மற்றும் பட்டுப் புடவை, மூத்த குடி மக்களுக்கு மாதம் ரூ.3000, வேலையில்லா பட்டதாரிகளுக்கு மாதம் ரூ.4000 என அள்ளி வீசப்பட்ட வாக்குறுதிகளில் ஒன்றைக் கூட நிறைவேற்ற இதுவரை நடவடிக்கை எடுக்காத தவெக அரசு.

ஆட்சிக்கு வந்த இரண்டே மாதத்தில் ஏராளமான பாலியல் வன்கொடுமைகள், போதைப் பொருட்கள் நடமாட்டம், கொலைகள், கொள்ளைகள், கனிம வளங்கள் திருட்டு, ரூ.100 கோடி மதிப்புள்ள பழனி கோயில் சொத்து தனியார் பத்திரம் பதிவு, டாஸ்மாக் கடைகள் மூடுவது என அறிவித்து விட்டு எலைட் பார்கள் திறப்பு, லாக்கப் மரணங்கள், திமுகவினர் மீது ஏராளமான பொய் வழக்குகள் என அவலங்களும் ஊழல்களும் தொடர் கதையாக உருவெடுத்துள்ளது தவெக ஆட்சியில். திட்டங்களின் பெயர்களை மாற்றலாம்... மக்கள் அடைந்த பலன்களை அழிக்க முடியாது...

மக்கள் நலனுக்கான எங்கள் பணி தொடர்ந்து நடைபெறும்.

இவ்வாறு அனிதா இராதாகிருஷ்ணன் எம்.எல்.ஏ. அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

### கல்பாக்கம் அணுமின் நிலையத்திலிருந்து தோரியம் மூலமாக பெறப்படும் அணுமின்சக்தி

# இந்தியாவின் எரிசக்தி பாதுகாப்பிற்கு உதவியாக உள்ளதா?

## மாநிலங்களவையில் - எஸ்.ஆர். சிவலிங்கம் கேள்வி!

*புதுடெல்லி, ஜூலை 27-*

திராவிட முன்னேற்றக் கழக, மேலவை உறுப்பினர் எஸ்.ஆர். சிவலிங்கம் 23 ஜூலை 2026 அன்று மாநிலங்களவையில் கல்பாக்கம் அணுமின் நிலையத்தி லிருந்து தோரியம் மூலமாகப் பெறப்படும் அனுமின் சக்தியின் வளர்ச்சிக்கு ஒன்றிய அரசு என்னென்ன முயற்சிகளை மேற்கொண்டுள்ளது? என்றும், புளுட்டோனியம் தனிமத்தின் பயன்பாடு எந்த அளவில் பயனுள்ளதாக உள்ளது? என்றும், இந்தியாவின் எரிசக்தி பாதுகாப்பினை உறுதிப்படுத்த ஒன்றிய அரசிடம் வேறு திட்டங்கள் ஏதும் உள்ளதா? என்றும், ஒன்றிய அரசின் அணுசக்தித் துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் அவர்களிடம் விரிவான கேள்வியை எழுப்பினார்.



ஒன்றியஅரசின் அணுசக்தித் துறை; துறை இணையமைச்சர் அவர்கள் அளித்த தில் வருமாறு:

இந்தியாவின் எரிசக்தி பாதுகாப்பினை உறுதிப்படுத்தவும், யூரேனியம் இறக்குமதியை குறைத்துக் கொள்ளவும், தோரியம் தனிமத்தில் மூலம் செயல்படும் பல்வேறு திட்டங்களை அணுசக்தித் துறை மேற்கொண்டு வருகிறது என்றும், முதல் நிலையில் யூரேனியம் தனிமத்தை பயன் படுத்தி கடின தண்ணீர் அனுமின் உலைகளையும் இரண்டாம் நிலையில், புளுட்டோனியம் தனிமத்தைப் பயன்படுத்தி வேகமாக செயல்படும் அணுமின் உலைகளையும், மூன்றாவது நிலையில் தோரியம் தனிமத்தைப் பயன்படுத்தி இந்தியாவின் எரிசக்தி பாதுகாப்பினை அனுசக்தித் துறை உறுதி செய்துள்ளது என்றும், பாபா அணுமின் சக்தி நிலையத்திலும் கல்பாக்கம் இந்திராகாந்தி அணுமின் சக்தி நிலையத்திலும், தோரியம் தனிமத்தின் பயன்பாடு அதிகரித்துள்ளது என்றும் இணையமைச்சர் மாநிலங்களவையில் தெரிவித்தார்.

மேலும், மும்பை பாபா அணுசக்தி ஆராய்ச்சி மையத்தின் உதவியுடன் அதிவேக அணு உலைகளின் மூலம் கார்பன் உமிழ்வு இல்லாத ஹைட்ரஜன் தயாரிப்பில் ஒன்றிய அரசு சாதனை புரிந்துள்ளது என்றும், காப்பர் மற்றும் குளோரின் தனிமங்களின் மின் பகுப்பாய்வு முறைகளை பின்பற்றி மின்சாரம் தயாரிக்கப்படுவதுடன் கூடவே ஹைட்ரஜன் உற்பத்தியும் உறுதி செய்யப்படுவதால், உரத்துறை, எஃகுத்துறை, வாகனப் போக்குவரத்து ஆகிய துறைகளில் ஹைட்ரஜனின் பயன்பாடுகள் அதிகரிக்க வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளது என்றும் பாரத் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் தோரியம் தனிமத்தைப் பயன்படுத்தி மின்சாரத்தை தயாரிக்கு முயற்சியில் ஒன்றிய அரசு உறுதியாக செயல்பட்டு வருகிறது என்றும் ஒன்றிய அரசின் அணுசக்தித் துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் அவர்கள் விரிவான பதிலை அளித்துள்ளார்.

---

### இளைஞர்களுக்கு அதிக வேலைவாய்ப்பை உருவாக்க ஒன்றிய அரசின் நடவடிக்கை என்ன?

# திறன் மேம்பாட்டுத் திட்டங்களின் செயல்பாடுகள் எந்த நிலையில் உள்ளன?

## மாநிலங்களவையில் – கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. கேள்வி!

*புதுடெல்லி, ஜூலை.27*

டெல்லி பாராளுமன்ற மாநிலங்களவை கூட்டத் தொடரில் நாமக்கல் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும் மாநிலங்களவை உறுப்பினரும் நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் கலந்து கொண்டார்.

அப்போது, திறன் மேம்பாடு மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டங்கள் வலுப்படுத்தப்பட்டுள்ளனவா? அவற்றின் விவரங்கள் என்ன, இளைஞர்களின் பங்கேற்பு அதிகரித்துள்ளதா, அதனால் கிடைத்துள்ள பயன்கள் என்ன? என மாநிலங்களவையில் மாநிலங்களவை உறுப்பினர் கே.ஆர்.என். இராஜேஸ்குமார் எம்.பி. கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதில் அளித்து பேசிய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை இணையமைச்சர் ஷோபா கரந்த்லாஜே, வேலைவாய்ப்புத் திறனை மேம்படுத்துவதுடன் வேலைவாய்ப்பை உருவாக்குவதும் ஒன்றிய அரசின் முன்னுரிமையாக உள்ளது. அதற்கேற்ப, நாடு முழுவதும் பல்வேறு வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

அரசால் செயல்படுத்தப்படும் பல்வேறு வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகளின் முழு விவரங்களையும் *https://dge.gov.in/schemes_programmes* என்ற இணையதளத்தில் காணலாம்.

பிரதான் மந்திரி கௌசல் விகாஸ் யோஜனா (PMKVY), ஜன் சிக்ஷன் சன்ஸ்தான் (JSS), தேசிய தொழிற்பயிற்சி ஊக்குவிப்புத் திட்டம் (NAPS), தொழிற்கல்வி நிலையங்கள் (ITI) மூலம் செயல்படுத்தப்படும் கைவினைஞர் பயிற்சித் திட்டம் (CTS) உள்ளிட்ட பல்வேறு திட்டங்களின் கீழ், திறன் மேம்பாட்டு மையங்கள், பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் நிறுவனங்களின் பரந்த வலைப் பின்னல் வாயிலாக திறன் பயிற்சி, மறுதிறன் பயிற்சி மற்றும் மேம்பட்ட திறன் பயிற்சிகளை வழங்கும் வகையில் ‘ஸ்கில் இந்தியா மிஷன்’ (SIM) செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தொழில்துறைக்குத் தேவையான திறன்களுடன் இந்திய இளைஞர்களை எதிர்காலத்திற்குத் தயார்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். மேலும், உற்பத்தித் துறைக்கு சிறப்பு முக்கியத்துவம் அளித்து, அனைத்துத் துறைகளிலும் வேலைவாய்ப்பு உருவாக்கத்தை ஆதரிக்கவும், வேலைவாய்ப்புத் திறனை மேம்படுத்தவும், சமூகப் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் ‘பிரதான் மந்திரி விக்சித் பாரத் ரோஜ்கார் யோஜனா’ என்ற வேலைவாய்ப்பு சார்ந்த ஊக்கத் தொகைத் திட்டம் (ELI) செயல்படுத்தப்பட்டு வருகிறது.



ரூ.99,446 கோடி மதிப்பிலான இத்திட்டத்தின் மூலம், இரண்டு ஆண்டுகளில் 3.5 கோடிக்கும் அதிகமான வேலைவாய்ப்புகளை உருவாக்க ஊக்குவிப்பது இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்திய அரசின் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம் தேசிய பணிச் சேவை (National Career Service NCS) இணையதளத்தையும் நிர்வகித்து வருகிறது.

இந்த டிஜிட்டல் தளம் மூலம் தனியார் மற்றும் அரசுத் துறை வேலைவாய்ப்புத் தகவல்கள், இணையவழி மற்றும் நேரடி வேலைவாய்ப்பு முகாம்கள், வேலை தேடுதல் மற்றும் பொருத்தமான வேலைவாய்ப்பைக் கண்டறிதல், தொழில்சார் ஆலோசனை, தொழிற் கல்வி வழிகாட்டுதல், திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் மற்றும் திறன் பயிற்சித் திட்டங்கள் உள்ளிட்ட ஒருங்கிணைந்த சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

வேலைவாய்ப்பு மற்றும் வேலையின்மை தொடர்பான அதிகாரப்பூர்வ புள்ளிவிவரங்கள், 201718 முதல் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் (MoSPI) நடத்தி வரும் காலமுறை தொழிலாளர் படை ஆய்வு (PLFS) மூலம் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

அந்த ஆய்வின் சமீபத்திய அறிக்கையின்படி, 15 முதல் 29 வயதுக்குட்பட்ட இளைஞர்களின் தொழிலாளர் படை பங்கேற்பு விகிதம் (LFPR) 2022 ஆம் ஆண்டில் 43.2 சதவீதமாக இருந்தது; அது 2025ஆம் ஆண்டில் 46.0 சதவீதமாக உயர்ந்துள்ளது.

அதேபோல், 15 முதல் 29 வயதுக்குட்பட்ட இளைஞர்களின் தொழிலாளர்-மக்கள் தொகை விகிதம் (WPR) 2022ஆம் ஆண்டில் 38.5 சதவீதமாக இருந்த நிலையில், 2025 ஆம் ஆண்டில் 41.4 சதவீதமாக அதிகரித்துள்ளது. மேலும், நாட்டின் வேலையின்மை விகிதம் (UR) 2022 ஆம் ஆண்டில் 10.6 சதவீதமாக இருந்த நிலையில், 2025ஆம் ஆண்டில் 9.9 சதவீதமாகக் குறைந்துள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

---

### தேர்வு முகமைகளா? தேர்வு வேதனைகளா?

# ஏன் வேண்டும் தேர்வு முகமைகள்? கல்வியை அளவிடுகிறோமா, அச்சத்தை வளர்க்கிறோமா?

முனைவர்
**செ.குறிஞ்சிவாணன்**
மாவட்ட ஒருங்கிணைப்பாளர்
தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி
புதுக்கோட்டை வடக்கு மாவட்டம்



கல்வியின் நோக்கம் அறிவை வளர்ப்பதா? அல்லது தேர்வுகளைப் பெருக்குவதா?

இந்தக் கேள்வி இன்று இந்தியா முழுவதும் ஒலிக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது.

நேற்று வரை பள்ளிப் பொதுத்தேர்வு. இன்று தேசிய நுழைவுத் தேர்வு. நாளை வேலைவாய்ப்புத் தேர்வு. அதற்குப் பிறகு தகுதித் தேர்வு. பின்னர் சிறப்புத் தகுதித் தேர்வு. இதற்கெல்லாம் மேலாக ஒவ்வொரு துறைக்கும் ஒவ்வொரு தேர்வு முகமை.

இது கல்வி அமைப்பா? அல்லது தேர்வுத் தொழிற்சாலையா? தேசியத் தேர்வு முகமை (NTA) உருவாக்கப்பட்டபோது, வெளிப்படையான, நம்பகமான, ஒருங்கிணைந்த தேர்வு முறையை உருவாக்குவோம் என்று கூறப்பட்டது. ஆனால் நடந்தது என்ன?

ஒவ்வொரு ஆண்டும் கேள்வித்தாள் கசிவு. தேர்வு மையங்களில் குளறுபடி. தொழில்நுட்பக் கோளாறுகள். மதிப்பெண் சர்ச்சைகள். நீதிமன்றங்களின் கதவைத் தட்டும் ஆயிரக்கணக்கான மாணவர்கள். ஒரு தேர்வு முடிவுக்காக மாதக்கணக்கில் காத்திருக்கும் குடும்பங்கள்.

இந்த நிலை தொடர்ந்தும் இருக்கும் போது, “இன்னும் புதிய தேர்வுகள் வேண்டும்” என்று கூறுவது பிரச்சினைக்கு தீர்வா? அல்லது பிரச்சினையை மேலும் பெருக்குவதா?

கல்வி என்பது நம்பிக்கையின் மீது கட்டமைக்கப்பட வேண்டிய அமைப்பு. ஆனால் இன்றைய கல்விக் கொள்கை முழுவதும் சந்தேகத்தின் மீது கட்டமைக்கப்பட்டிருக்கிறது.

பள்ளி ஆசிரியரை அரசு தேர்வு செய்து பணியில் அமர்த்துகிறது. பின்னர் அவருக்கே மீண்டும் தகுதித் தேர்வு நடத்துகிறது.

நாளை அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பணியாற்றும் பேராசிரியர்களுக்கும் அதே நிலை வராதென்று யார் உறுதி அளிக்க முடியும்?

UGC விதிமுறைகளின்படி NET, SET, முனைவர் பட்டம், தேர்வுக்குழு நேர்காணல், இடஒதுக்கீட்டு நடைமுறை இவற்றையெல்லாம் கடந்து பணியில் சேர்ந்த பேராசிரியரிடமும், “உங்களது தகுதியை மீண்டும் நிரூபியுங்கள்” என்று அரசு கூறும் நாள் வந்தால், அது கல்வித் தரத்தின் வெற்றியா? அல்லது நிர்வாகத்தின் தோல்வியா?

**அரசு நியமித்த ஆசிரியரையும் அரசு நம்பவில்லை.**

**அரசு அங்கீகரித்த பட்டத்தையும் அரசு நம்பவில்லை.**

**பல்கலைக்கழகங்கள் வழங்கும் மதிப்பெண்களையும் அரசு நம்பவில்லை.**

**அப்படியானால், நம்பிக்கை இல்லாத கல்வி அமைப்பை ஏன் நடத்த வேண்டும்?**

ஒரு மாணவன் பன்னிரண்டு ஆண்டுகள் பள்ளியில் படிக்கிறான். மூன்று ஆண்டுகள் கல்லூரியில் படிக்கிறான். நூற்றுக்கணக்கான வகுப்புகளில் பங்கேற்கிறான். ஆயிரக்கணக்கான மணி நேரம் கற்றுக்கொள்கிறான்.

ஆனால் இறுதியில் மூன்று மணி நேரத் தேர்வுதான் அவனது வாழ்க்கையை முடிவு செய்கிறது.

இது கல்வியா?

அல்லது கல்வியின் பெயரில் நடைபெறும் அநீதியா?

தேர்வு முடிவுகள் வெளியாகும் ஒவ்வொரு ஆண்டும் செய்தித்தாள்களில் வரும் செய்திகள் மனதை உலுக்குகின்றன.

“மருத்துவக் கனவு நொறுங்கியது.”

“மதிப்பெண் குறைந்ததால் மனஉளைச்சல்.”

“தேர்வுத் தோல்வியால் மாணவர் தற்கொலை.”

இவை வெறும் செய்தித் தலைப்புகள் அல்ல.

ஒரு கல்விக் கொள்கையின் தோல்விக்கான சாட்சிகள்.

ஒரு மாணவன் தோல்வியடைந்தால் அவன் மட்டும் அழுவதில்லை.

அவனது தாயும் அழுகிறாள்.

தந்தையும் உடைந்து போகிறார்.

குடும்பம் முழுவதும் மனவேதனையில் மூழ்குகிறது.

பல பெற்றோர்கள் தங்கள் வருமானத்தை விட அதிகமாகக் கடன் வாங்கி பயிற்சி மையங்களில் குழந்தைகளைச் சேர்க்கின்றனர். ஆண்டுகள் கணக்கில் பயிற்சி. இலட்சக்கணக்கில் செலவு. இறுதியில் ஒரே ஒரு தேர்வு.

அந்த ஒரு நாளில் குழந்தைக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டால்?

தேர்வு மையத்தில் தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டால்?

கேள்வித்தாளில் தவறு ஏற்பட்டால்?

அதற்கான பொறுப்பை யார் ஏற்கப் போகிறார்கள்?

தேர்வு முகமையா?

அரசா?

அல்லது “விதி” என்று சொல்லி குடும்பங்களை ஆறுதல் கூறிவிடப் போகிறோமா?

இன்று இந்தியாவில் கல்வியை விட பயிற்சி மையங்கள் வளர்கின்றன.

பள்ளிகளை விட கோச்சிங் சென்டர்கள் பெருகுகின்றன.

ஆசிரியர்களை விட தேர்வு ஆலோசகர்கள் அதிகரிக்கின்றனர்.

இது கல்வி சீர்திருத்தமா?

அல்லது கல்வியின் வணிகமயமாக்கலா?

தேர்வுகளைப் பெருக்குவது கல்விச் சீர்திருத்தம் அல்ல. கல்வி வாய்ப்புகளைப் பெருக்குவதுதான் உண்மையான சீர்திருத்தம்.

தரமான கல்வியை உருவாக்க வேண்டுமானால், முதலில் தரமான பள்ளிகளை உருவாக்குங்கள்.

பல்கலைக்கழகங்களை வலுப்படுத்துங்கள்.

ஆசிரியர்களுக்கு தொடர்ச்சியான பயிற்சிகளை அளியுங்கள்.

ஆராய்ச்சிக்கு நிதி ஒதுக்குங்கள்.

மாணவர்களின் படைப்பாற்றலை ஊக்குவியுங்கள்.

ஆனால், இவற்றையெல்லாம் புறக்கணித்துவிட்டு, ஒவ்வொரு பிரச்சினைக்கும் ஒரு புதிய தேர்வு என்ற அணுகுமுறை, கல்வியை முன்னேற்றாது.

தேர்வுகளை நடத்தும் முகமைகள் அதிகரிக்க அதிகரிக்க, மாணவர்களின் மனஅழுத்தமும் அதிகரிக்கிறது.

பெற்றோரின் பொருளாதாரச் சுமையும் அதிகரிக்கிறது.

ஆசிரியர்களின் தொழில்முறை சுதந்திரமும் குறைகிறது.

இறுதியில், கல்வி ஒரு உரிமையாக இல்லாமல், தேர்வுகளின் வழியாக மட்டுமே கிடைக்கும் வாய்ப்பாக மாற்றப்படுகிறது.

கல்வி உரிமையைப் பாதுகாக்கும் தி.மு.க.வின் தொடர் குரல்

மருத்துவக் கல்வி சேர்க்கைக்கான NEET தேர்வு அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து, தமிழ்நாட்டில் அதன் தாக்கம் குறித்து தொடர்ச்சியான அரசியல் மற்றும் சமூக விவாதங்கள் நடைபெற்று வருகின்றன. இந்த விவகாரத்தில், திராவிட முன்னேற்றக் கழகம் கல்வியில் சமூகநீதி, மாநில உரிமை மற்றும் சமமான வாய்ப்பு ஆகிய கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு தொடர்ந்து தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தி வருகிறது.

2021ஆம் ஆண்டு கழகத்தலைவர் அவர்கள், ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, தமிழ்நாடு அரசு, ஓய்வுபெற்ற நீதிபதி ஏ.கே.ராஜன் தலைமையில் உயர்மட்டக் குழுவை அமைத்து, NEET தேர்வின் சமூக மற்றும் கல்வி தாக்கங்கள் குறித்து விரிவான ஆய்வை மேற்கொண்டார்.. அந்தக் குழுவின் அறிக்கையின் அடிப்படையில், தமிழ்நாடு சட்டப்பேரவையில் NEET விலக்கு மசோதா நிறைவேற்றப்பட்டு, குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டது. ஒப்புதல் கிடைக்காத நிலையில், அதே மசோதா மீண்டும் சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டு, மாநிலத்தின் நிலைப்பாடு உறுதியாக பதிவு செய்யப்பட்டது.

**இந்த விவகாரத்தில் தற்போது ஆளும் அரசு ஒன்றிய அரசிடம் தொடர்ந்து விலக்கு கோரி வலியுறுத்தவேண்டும். உச்சநீதிமன்றத்திலும் தனது சட்ட நடவடிக்கைகளை தீவிரமாக முன்னெடுக்க வேண்டும். இவை, ஒரு தேர்வுக்கு எதிரான அரசியல் எதிர்ப்பு மட்டுமல்ல; கல்வி வாய்ப்பில் சமூகநீதியை நிலைநிறுத்த வேண்டும் என்ற கொள்கை அடிப்படையிலான முயற்சிகளாக முன்வைக்கப் படவேண்டும்.**

இதேபோன்று, ஆசிரியர்கள் மற்றும் பேராசிரியர்களின் நியமனத்திலும், பணியில் இருக்கும் கல்வியாளர்களின் தொழில்முறை மரியாதை பாதுகாக்கப்பட வேண்டும் என்பது முக்கிய மான கொள்கையாகும். ஏற்கெனவே தகுதித் தேர்வுகள், நேர்காணல்கள், பல்கலைக்கழக விதிமுறைகள் ஆகியவற்றின் அடிப்படையில் நியமிக்கப்பட்ட வர்களுக்கு மீண்டும் மீண்டும் புதிய தகுதித் தேர்வுகளை விதிப்பது கல்வி அமைப்பின் மீது நம்பிக்கையின்மையைஉருவாக்கும். இதற்கு மாற்றாக, ஆசிரியர்களின் திறன் மேம்பாடு, தொடர்ச்சியான பயிற்சி, ஆராய்ச்சி ஊக்குவிப்புமற்றும் தரமான கல்விச் சூழலை உருவாக்குவதே முன்னுரிமையாக இருக்க வேண்டும்.

கல்விக் கொள்கை என்பது தேர்வுகளைப் பெருக்குவதற்கான கருவியாக அல்ல; சமூக முன்னேற்றத்திற்கான கருவியாக இருக்க வேண்டும். அதுவே திராவிட முன்னேற்றக் கழகம் பல ஆண்டுகளாக வலியுறுத்தி வரும் கல்வித் தத்துவத்தின் மையக் கருத்தாகும்

“தேர்வுகள் அல்ல, கல்வி வாய்ப்புகள்தான் சமூக நீதியை உருவாக்கும்” என்ற கொள்கையே தி.மு.க.வின் அடிப்படைச் சிந்தனையாகத் தொடர்ந்து இருந்து வருகிறது.

**ஒரு நாகரிகமான நாடு, தனது இளைஞர்களின் கனவுகளை நம்பிக்கையால் வளர்க்க வேண்டுமே தவிர, முடிவில்லாத தேர்வுகளால் சோதிக்கக் கூடாது.**

**நாட்டிற்கு தேவை புதிய தேர்வு முகமைகள் அல்ல.**

**நம்பிக்கைக்குரிய கல்வி அமைப்பே தேவை.**

**மாணவர்களைத் தேர்வுகளால் அளவிடும் கொள்கை அல்ல; அவர்களின் திறமையை வளர்க்கும் கொள்கையே தேவை.**

**அதனால்தான் இன்று கேட்க வேண்டிய மிக முக்கியமான கேள்வி:**

**“இன்னும் எத்தனை தேர்வு முகமைகள்?” என்பதல்ல;**

**“ஏன் இவ்வளவு தேர்வு முகமைகள்?” என்பதுதான்!**